# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
# (FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
## DEPOSITION OF WITNESS

O.S.NO. - 151/2021

P.W.1 - திருமதி.ஷிவாலி

DATE - 09.04.2026.

வா.சா.1குறுக்கு விசாரணை- தொடர்ச்சி

என் கணவர் மருத்துவ சிகிச்சைக்காக ரூ.5,00,000/- வரை எனது தந்தை மருத்துவ செலவுகள் செய்தார் என்பதற்கு மருத்துவ ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவர் OLA நிறுவனத்தில் Team Leader ஆக பணிபுரிந்து வந்தார். அந்த நிறுவனத்தில் என் கணவருக்கு மருத்துவ செலவுகள் செய்தார்கள் என்றால் சரியல்ல. என் கணவர் இறந்த பிறகு வேலை செய்த நிறுவனத்திலிருந்து எந்த தொகையும் பெறவில்லை எனது கணவர் 9 மாதமாக அந்த நிறுவனத்தில் வேலை செய்யவில்லை. வா.சா.ஆ.7 கர்நாடகாவில் வாங்கிய எனது கணவருக்கு உண்டான வாரிசு சான்றிதழ் என்றால் சரி. என் கணவருக்கு அவருடைய தாயார் வாரிசு என அவரை எனது மனுவில் குறிப்பிடவில்லை என்றும் வாரிசு சான்றிதழிலும் எனது கணவரின் தாயாரான அவரது தாயாரை வாரிசாக குறிப்பிடவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி என் கணவரின் தாயார் அவரை வாரிசு சான்றிதழில் சேர்க்காமல் வா.சா.ஆ.7 ஐ நான் பெற்று என் கணவரின் இறப்பு பலன்கள் நானே பெற்றேன் என்றால் சரியல்ல. என் கணவர் வாழ்ந்தது மறைந்தது Bangalore ராமமூர்த்தி நகர் 1ம் பிரதிவாதியின் முகவரியில் என்றால் சரி. 1ம் பிரதிவாதி இருப்பதை மறைத்து நான் என் கணவருக்கு பொய்யாக என்னை மட்டும் வாரிசு என்று சொல்லி வாரிசு சான்றிதழ் பெற்று அதன் அடிப்படையில் எனது கணவரின் இறப்பு பலன்களை நான்

மட்டும் பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் தற்போது நான் வசிக்கவில்லை. எனது பெற்றோருடன் தற்போது நான் வசிக்கிறேன். நான் தாவா சொத்தில் வசிக்காததால் சரியான நீதிமன்ற கட்டணம் செலுத்த தவறியதால் அதன் அடிப்படையில் தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. இந்த தாவாவிற்கு வழக்கு மூலம் இல்லை என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் கோரியுள்ள பாகம் தவறானது என்று சொன்னால் சரியல்ல. தாவா 1ம் அயிட்டம் சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும் அது அவருடைய தனிப்பட்ட சொத்து என்றும் அவர் உயிருடன் இருப்பதால் அதில் பாகம் கோர எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. தாவா 2ம் அயிட்டம் சொத்தை பொருத்து எனக்கு 1/6 பாகம் தான் உரிமை உள்ளது என்றால் சரியல்ல. தாவாவில் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றும் தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. தாவா எனது கணவர் இறந்த பிறகு தாவா சொத்தில் நான் சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 09.04.2026 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2026.04.09 20:46:32 +0600

Additional District Judge(FTC),

Vellore.